**லுனுகல பிரதேச சபை**
**பதுளை மாவட்டம்**

-------------------------------

## 1. நிதிக்கூற்றுக்கள்

### 1.1 நிதிக்கூற்றுக்கள் சமர்ப்பித்தல்

2017 ஆம் ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் 2018 மார்ச் 21 ஆந் திகதி கணக்காய்விற்கு சமர்ப்பிக்கப்பட்டிருந்ததுடன், அந் நிதிக்கூற்றுக்கள் தொடர்பாக கணக்காய்வாளர் தலைமையதிபதியின் அறிக்கை 2018 ஆகஸ்ட் 30 ஆந் திகதி தலைவருக்கு அனுப்பப்பட்டது.

### 1.2 முனைப்பழியுள்ள அபிப்பிராயம்

இவ்வறிக்கையின் 1.3 பந்தியில் விவரிக்கப்பட்ட விடயங்களின் தாக்கத்தினைத் தவிர்ந்து, லுனுகல பிரதேச சபையின் 2017 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமையினையும் அத் திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான அதனது நிதிசார் செயலாற்றலினையும் பொதுவாக ஏற்றுக்கொள்ளப்பட்ட கணக்கீட்டுத் தத்துவங்களுக்கு இணங்க நிதிக்கூற்றுக்கள் உண்மையாகவும் நியாயமாகவும் தருகின்றன என்பது எனது அபிப்பிராயமாகும்.

### 1.3 நிதிக்கூற்றுக்கள் மீதான கருத்துரைகள்

#### 1.3.1 கணக்கீட்டுக் குறைபாடுகள்

பின்வரும் விடயங்கள் அவதானிக்கப்பட்டன.

(அ) மீளாய்வாண்டிற்கான திசெம்பர் 31 திகதியில் உள்ளவாறு வங்கிக் கணக்கு ஒன்றின் மீதி ரூபா 484,092 தொகை எனினும், அதனை ரூபா 806,579 தொகை என கணக்கீடு செய்திருந்தமையால் நடைமுறை சொத்துக்கள் ரூபா 322,487 இனால் மிகையாகக் காட்டப்பட்டிருந்தது.

(ஆ) மீளாய்வாண்டிற்கான 06 முச்சக்கர வண்டி தரிப்பு நிலையங்களில் இருந்து பெற வேண்டிய வருமானம் ரூபா 170,200 தொகையினை கணக்கீடு செய்திருக்காமையால் மிகை மற்றும் நடைமுறை சொத்துக்கள் அப் பெறுமதியினால் குறைவாகக் காட்டப்பட்டிருந்தது.

(இ) மீளாய்வாண்டு திசெம்பர் 31 திகதியில் உள்ளவாறு அடாவத்த பங்களா பகுதியில் நீர் செயற்திட்டத்தின் செலவு கடன்கொடுத்தோர் என ரூபா 100,000 தொகை ஒதுக்கப்பட்டிருந்த போதிலும், செலவுகள் மிகையாகவும் பொறுப்புக்கள் மிகையாகவும் காட்டப்பட்டிருந்தன.

(ஈ) மீளாய்வாண்டு திசெம்பர் 31 திகதியில் உள்ளவாறு உடைத்து அகற்றப்பட்ட பழைய அலுவலக கட்டிடத்தின் பெறுமதி ரூபா 150,000 தொகை மிகைக் கணக்குகளில் காட்டப்பட்டிருந்தமையால் அப்பெறுமதியினால் சொத்துக்கள் மிகையாகக் காட்டப்பட்டிருந்தன.

(உ) மீளாய்வாண்டிற்கான நூலக புத்தகங்கள் கொள்வனவு செய்தல் மற்றும் நன்கொடை புத்தகங்களின் கூட்டுத்தொகை ரூபா 259,454 தொகை எனினும், அதனை ரூபா 219,156 தொகை என கணக்கீடு செய்திருந்த காரணத்தினால் நிலையான சொத்துக்கள் மற்றும் மூலதன செலவீட்டிற்கான அரசிறை உதவுத்தொகை கணக்கு ரூபா 40,298 தொகை குறைவாகக் காட்டப்பட்டிருந்தது.

**1.3.2 தொங்கல் கணக்கு**

கடந்த ஆண்டுகள் முதல் தொடர்ந்தும் காணப்படும் ரூபா 403,670 இற்கான தொங்கல் கணக்கின் மீதி தீர்த்திருக்கவில்லை.

**1.3.3 பெற வேண்டிய மற்றும் செலுத்த வேண்டிய கணக்குகள்**

**(அ) பெற வேண்டிய கணக்குகள்**

மீளாய்வாண்டு திசெம்பர் 31 திகதியில் உள்ளவாறு ரூபா 21,557,368 தொகைக்கான பெற வேண்டிய கணக்கு மீதியில், 7 வருட காலம் கடந்துள்ள கடை வாடகை ரூபா 852,880 தொகை, ஏக்கர் வரி ரூபா 29,499 தொகை, நிலுவை நீர்க்கட்டணம் ரூபா 965,628 தொகை, நிலுவை டென்டர் கடை வாடகை ரூபா 2,370,719 தொகை, நிலுவை வீட்டு வாடகை ரூபா 13,548 தொகை, நிலுவை வீதவரி ரூபா 336,656 தொகை, நிலுவை ஏனைய வருமானங்கள் ரூபா 2,506,328 தொகை மற்றும் ஒரு வருட காலம் கடந்துள்ள மூலதன உதவி ரூபா 14,482,110 தொகை என்பவை அறவிடப்பட்டிருக்கவில்லை.

**(ஆ) செலுத்த வேண்டிய கணக்குகள்**

மீளாய்வாண்டு திசெம்பர் 31 திகதியில் உள்ளவாறு ரூபா 22,108,645 தொகை செலுத்த வேண்டிய கணக்கு மீதியில் ஒரு வருட காலம் கடந்துள்ள செலவு கடன்கொடுத்தோர் ரூபா 260,462 தொகை மற்றும் நிர்மாண வேலை கடன்கொடுத்தோர் ரூபா 21,848,183 தொகையினை தீர்ப்பதற்கு நடவடிக்கை எடுத்திருக்கவில்லை.

**1.3.4 கணக்காய்விற்கான எழுத்துமூல சான்றுகள் இன்மை**

தேவையான தகவல்கள் சமர்ப்பிக்கப்படாமையால் கூட்டுத்தொகை ரூபா 83,665,126 தொகைக்கான 04 கணக்கு விடயங்களை கணக்காய்வின் போது திருப்திகரமாக மெய்மையாய்வதற்கு முடியாதிருந்தது.

**1.3.5 இணக்கமின்மைகள்**

**1.3.5.1 சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் மற்றும் முகாமைத்துவ தீர்மானங்களுடன் இணக்கமின்மை**

சட்டங்கள் விதிகள், பிரமாணங்கள் மற்றும் முகாமைத்துவ தீர்மானங்களுடன் இணக்கமின்மைச் சந்தர்ப்பங்கள் கீழே காண்பிக்கப்படுகின்றன.

| | சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் மற்றும் முகாமைத்துவ தீர்மானங்களுடன் தொடர்பு | பெறுமதி | இணக்கமின்மை |
|---|---|---|---|
| | | ரூபா | |
| (அ) | 1987 இன் 15 ஆம் இலக்க பிரதேச சபை சட்டத்தின் பிரிவுகள் 158, 159 | 2,011,163 | முன்னைய ஆண்டு மற்றும் மீளாய்வாண்டிற்கான நிலுவை வருமானங்களை அறவீடு செய்வதற்காக நடவடிக்கை எடுத்திருக்கவில்லை. |
| (ஆ) | 1988 இன் பிரதேச சபை (நிதி மற்றும் நிருவாக) விதிக் கோவை | | |
| | (i) விதி 217 | | சபைக்குச் சொந்தமான அனைத்து காணிகள் மற்றும் கட்டிடங்கள் தொடர்பாக பி.ச.46 படிவத்தின் பிரகாரம் பதிவேடு ஒன்று பேணியிருக்கவில்லை. |
| | (ii) விதி 218 | | சபைக்குச் சொந்தமான காணிகள் மற்றும் கட்டிடங்களின் வருடாந்த பரிசோதனை செய்து அறிக்கை ஒன்று சபைக்கு சமர்ப்பித்திருக்கவில்லை. |
| (இ) | இலங்கை சனநாயக சோசலிசக் குடியசரின் நிதிப் பிரமாணக் கோவை | | |
| | (i) நிதிப் பிரமாணம் 104(3) | 60,215 | பெக்கோ இயந்திரத்திற்கு ஏற்பட்டிருந்த விபத்து தொடர்பாக நட்டத்திற்கு பொறுப்பு சொல்ல வேண்டியவர்களிடம் அறவீடு செய்வதற்காக நடவடிக்கை எடுத்திருக்காமை. |
| | (ii) நிதிப் பிரமாணம் 104(4) | | விபத்து ஏற்பட்டு 3 மாதங்கள் கழிவதற்கு முன்னர் முழுமையான அறிக்கையொன்று சமர்ப்பிக்கப்பட வேண்டும். அதன் பிரகாரம் நடவடிக்கை எடுத்திருக்கவில்லை. |
| | (iii) நிதிப் பிரமாணம் 110 | | சேதங்கள் பதிவேடு பேணப்பட்டிருக்கவில்லை. |

## 2. நிதி மீளாய்வு

### 2.1 நிதி விளைவுகள்

சமர்பிக்கப்பட்டிருந்த நிதிக்கூற்றுகளின் பிரகாரம் 2017 திசெம்பர் 31 திகதியில் முடிவடைந்த ஆண்டின் போது சபையின் மீண்டுவரும் செலவை விஞ்சிய வருமானம் ரூபா 5,464,146 தொகையாக காணப்பட்டதுடன், அதற்கு நேரொப்ப முன்னைய ஆண்டின் மீண்டுவரும் செலவை விஞ்சிய வருமானம் ரூபா 7,670,733 ஆகக் காணப்பட்டது.

### 2.2 நிதிக் கட்டுப்பாடு

2016 ஜனவரி 01 திகதி முதல் 2017 திசெம்பர் 31 திகதி வரையான காலப்பகுதியில் ரூபா 1,279,678 இற்கான மீதியொன்றினை கொண்டிருந்த சபைக்கு சொந்தமான நடைமுறை கணக்கு ஒன்று செயற்படுத்தப்படாமல் பேணப்பட்டிருந்தது.

### 2.3 வருமான நிருவாகம்

#### 2.3.1 மதிப்பீட்டு வருமானம், சிட்டையிடப்பட்ட வருமானம், சேகரிக்கப்பட்ட வருமானம் மற்றும் வருமான நிலுவை

மீளாய்வாண்டு மற்றும் முன்னைய ஆண்டிற்காக சமர்பித்திருந்த மதிப்பீட்டு வருமானம், சிட்டை இடப்பட்ட வருமானம் மற்றும் நிலுவை வருமானம் தொடர்பான தகவல்கள் கீழே காணப்படுகின்றன.

| | 2017 | | | | 2016 | | | |
|---|---|---|---|---|---|---|---|---|
| வருமான மூலம் | மதிப்பீட்டு வருமனம் | சிட்டையிடப்பட்ட வருமானம் | சேகரித்த வருமானம் | திசெம்பர் 31 திகதியில் உள்ளவாறு மொத்த நிலுவை | மதிப்பீட்டு வருமனம் | சிட்டையிடப்பட்ட வருமானம் | சேகரித்த வருமானம் | திசெம்பர் 31 திகதியில் உள்ளவாறு மொத்த நிலுவை |
| | ரூபா | ரூபா | ரூபா | ரூபா | ரூபா | ரூபா | ரூபா | ரூபா |
| (i) வீதவரி மற்றும் வரி | 257,000 | 259,225 | 194,164 | 65,601 | 257,000 | 246,175 | 150,373 | 95,801 |
| (ii) வாடகை | 6,649,625 | 1,048,850 | 573,075 | 475,775 | 4,346,024 | 1,063,740 | 544,747 | 510,993 |
| (iii) அனுமதிப் பத்திரக் கட்டணம் | 906,000 | - | - | - | 741,000 | - | - | - |
| (iv) ஏனையவை | 323,500 | 1,398,107 | 963,048 | 435,059 | 298,500 | 1,340,681 | 912,207 | 428,474 |
| மொத்தம் | 8,136,125 | 2,706,182 | 1,730,287 | 975,895 | 5,642,524 | 2,650,596 | 1,607,327 | 1,035,268 |

#### 2.3.2 வருமானம் சேகரித்தல் செயலாற்றுகை

2017 திசெம்பர் 31 திகதியில் உள்ளவாறு மொத்த சிட்டை இடப்பட்ட வருமானம் ரூபா 2.7 மில்லியன் ஆக காணப்பட்டதுடன், ஆண்டின் போது சேகரிக்கப்பட்ட வருமானம் ரூபா 1.7 மில்லியன் ஆகும். எவ்வாறாயினும், வருட இறுதியில் உள்ளவாறு ரூபா 9.75 மில்லியன் வருமானம் ஒன்று அறவிடப்பட வேண்டியிருந்ததுடன் முன்னைய ஆண்டுடன் ஒப்பீடு செய்யும் போது நிலுவை வருமானம் 6 சதவீதத்தினால் அதிகரித்திருந்தது.

### 2.3.3 வீத வரியும் வரியும்

1987 இன் 15 ஆம் இலக்க பிரதேச சபை சட்டத்தின் பிரிவு 134(1) இன் பிரகாரம் முன்னேற்றமடைந்த கிராமப்புறங்களை இனங்கண்டு புதிய வீதவரி பெறுமதி மதிப்பீடு செய்து அறவிடப்பட வேண்டுமெனினும், 2004 ஆண்டிற்கான பெறுமதி மதிப்பீட்டின் அடிப்படையிலேயே மீளாய்வாண்டிற்கான வீதவரி அறவிடப்பட்டிருந்தது.

### 2.3.4 வாடகை

1980 திசெம்பர் 31 திகதிய 1980/46 ஆம் இலக்க உள்ளூராட்சி ஆணையாளரின் சுற்றறிக்கையின் ஏற்பாடுகளின் பிரகாரம் ஐந்து வருடங்களுக்கு ஒரு முறை வாடகை பெறுமதி மதிப்பீடு செய்து உடன்படிக்கை மேற்கொள்ளப்பட வேண்டும். எனினும், அவ்வாறு செய்திருக்கவில்லை. அதன் பிரகாரம் 2007, 2012 ஆண்டுகளின் போது ஆண்டுகளுககான பெறுமதி மதிப்பீடுகளின் பிரகாரம் மீளாய்வாண்டிற்கான வாடகை அறவிடப்பட்டிருந்தது.

### 2.3.5 அனுமதிப்பத்திரக் கட்டணம்

மீளாய்வாண்டு தொடர்பாக 14 வர்த்தகங்களிலிருந்து அறவிடப்பட வேண்டிய அனுமதிப்பத்திரக் கட்டணம் ரூபா 98,000 ஆகும்.

### 2.3.6 ஏனைய வருமானங்கள்

(அ) (i) பிரதேச நீர் செயற்திட்டங்கள் இரண்டில் இருந்து நீர் பெற்றுக்கொள்ள நீர்நுகர்வோர் 254 இற்கன நீர்மானிகள் பொருத்தப்படாமல் மாதாந்த வீட்டுக்கான அலகு ஒன்றிற்கு ரூபா 100 இற்கான நிரந்தர கட்டணம் மாத்திரம் அறவிடப்பட்டிருந்தது.

(ii) நீண்ட காலமாக காணப்படும் நிலுவை நீர்க் கட்டணம் அறவிடப்படாமையினால் நீர் தொடர்புகளை துண்டித்திருந்த 96 நுகர்வோரிடம் 2017 திசெம்பர் 31 திகதியில் உள்ளவாறு காணப்பட்ட ரூபா 459,713 இற்கான நிலுவை நீர் கட்டணத்தை அறவீடு செய்வதற்கு போதிய நடவடிக்கைகள் எடுத்திருக்கவில்லை.

(ஆ) பெக்கோ லோடர் வாடகைக்கு கொடுத்ததின் மூலம் 2017 திசெம்பர் 31 திகதி வரை 100.9 இயந்திர மணித்தியாலங்களுக்காக ரூபா 353,717 இற்கான கட்டணம் அறவிடப்பட்டிருக்கவில்லை.

### 2.3.7 நீதி மன்றத் தண்டப்பணம் மற்றும் முத்திரைக் கட்டணமும்

மீளாய்வாண்டு திசெம்பர் 31 திகதியில் உள்ளவாறு மாகாண சபையிடம் மற்றும் ஏனைய நிறுவனங்களில் இருந்து நீதி மன்றத் தண்டப்பணம் ரூபா 8,742,676 முத்திரைக் கட்டணம் 839,829 உம் அறவிடப்பட வேண்டியிருந்தது.

## 3 செயற்பாட்டு மீளாய்வு

### 3.1 செயலாற்றுகை

பிரதேச சபை சட்டத்தின் 3 ஆம் பிரிவின் கீழ் மக்களின் சுகாதாரம், பொது பயன்பாட்டு சேவை மற்றும் பொது பாதைகள் மீதான கருமங்களை முறைப்படுத்துதலும் கட்டுப்படுத்துதலும் பொதுமக்களின் சுகபோக வாழ்க்கை வசதிகள் மற்றும் நலன்புரி ஆகிய சபையினால்

நிறைவேற்றப்பட வேண்டியிருந்த செய்பணிகளை நிறைவேற்றுவது தொடர்பாக கண்டுபிடிக்கப்பட்ட விடயங்கள் கீழே காண்பிக்கப்படுகின்றன.

**(அ) துணை விதிகள்**

பிரதேச சபை சட்டத்தில் 126 பிரிவின் பிரகாரம் 30 பிரதான கருமங்களை நிறைவேற்றுவதற்காக துணை விதிகள் ஆக்கப்பட வேண்டியிருந்த போதிலும் 2017 திசெம்பர் 31 திகதி வரை 10 கருமங்களுக்காக துணை விதிகள் ஆக்கியிருக்கவில்லை.

**(ஆ) செயல் நடவடிக்கைத் திட்டம்**

மீளாய்வாண்டிற்கான வருடாந்த செயல் நடவடிக்கைத் திட்டமொன்று தயாரித்திருக்கவில்லை.

**(இ) திண்மக் கழிவுப்பொருள் முகாமைத்துவம்**

திண்மக் கழிவுப்பொருள் முகாமைத்துவச் செயற்திட்டத்தை செயற்படுத்துவதற்காக 2014 ஆண்டின் போது காணி ஒன்று கொள்வனவு செய்து அதற்காக ரூபா 93,200 தரை வாடகை செலுத்தப்பட்டிருந்தது. 2018 ஆகஸ்ட் அளவில் காணி பயன்படுத்தப்படாமல் காணப்பட்டது,

**(ஈ) நிலை பேறான அபிவிருத்தி குறிக்கோள்**

நிலைபேறான அபிவிருத்தி குறிக்கோள் தொடர்பான 2030 நிகழ்ச்சி நிரல் மீது சபை அறிந்திருக்காத காரணத்தினால் அக் குறிக்கோள்களுக்கான உலகலாவிய சுட்டிகளின் மூலம் சபையின் அதிகாரப் பிரதேசத்தில் பொதுமக்களின் வாழ்க்கை தரத்தை மற்றும் சுகாதாரத்தை மேண்படுத்துவதற்காக நீண்டகால திட்டங்கள் 2018 வரையும் தயாரித்திருக்கவில்லை.

**3.2 முகாமைத்துவத் திறமையின்மை**

**இழப்புக்களும் சேதங்களும்**

2016 ஆண்டிற்கான சபைக்குச் சொந்தமான பெக்கோ லோடர் இயந்திரம் முழுமையாக காப்புறுதி செய்திருந்த போதிலும் 2016 ஜுலை பெக்கோ லோடருக்கு ஏற்பட்டிருந்த விபத்து தொடர்பாக ரூபா 60,125 இற்கான நட்டமொன்று செலுத்துவதற்கு முடியாது என காப்புறுதி நிறுவனம் அறிவித்திருந்தது.

**3.3 மனித வள முகாமைத்துவம்**

மீளாய்வாண்டு திசெம்பர் 31 திகதியில் உள்ளவாறு செயலாளர், தொழில்நுட்ப உத்தியோகத்தர், முகாமைத்துவ உதவியாளர் மற்றும் முன்பள்ளி ஆசிரியர் 04 வெற்றிடங்கள் மற்றும் 02 அபிவிருத்தி உத்தியோகத்தர்கள் மற்றும் 22 பாதை தொழிலாளர்கள் மிகை காணப்பட்டது.

**3.4 சொத்துக்கள் முகாமைத்துவம்**

**3.4.1 விளைவற்ற சொத்துக்கள்**

2010 ஆண்டின் போது பஸ்ஸர பிரதேச சபையிலிருந்து லுனுகல பிரதேச சபைக்கு சாட்டப்பட்டிருந்த புத்தக பெறுமதி ரூபா 107,500 தொகைக்கு சிதறிய நிலையிலுள்ள கைடிரக்டரை அகற்றுவதற்கு நடவடிக்கை எடுத்திருக்கவில்லை.

**3.5 பெறுகை**

**3.5.1 பெறுகை திட்டம்**

மீளாய்வாண்டிற்கான பெறுகை திட்டமொன்று தயாரித்திருக்கவில்லை.

## 4. கணக்களிப்பொறுப்பும் நல்லாளுகையும்

**4.1 பாதீட்டு கட்டுப்பாடு**

மீளாய்வாண்டிற்கான பாதீட்டு மற்றும் செலவுகள், உள்ளவாறான வருமானம் மற்றும் செலவுகள் உடன் இணக்கஞ் செய்த போது கணிசமான முரண்கள் அவதானிக்கப்பட்டமையால் பாதீடு ஆக்கபூர்வமான கட்டுப்பாடுக் கருவி ஒன்றாக பயன்படுத்தப்படவில்லை என அவதானிக்கப்பட்டது.

## 5. முறைமைகள் மற்றும் கட்டுப்பாடுகள்

கணக்காய்வின் போது அவதானிக்கப்பட்ட குறைபாடுகள் அவ்வப்போது சபையின் கவனத்தில் கொண்டுவரப்பட்டுள்ளதுடன் பின்வரும் கட்டுப்பாட்டு பரப்புகள் தொடர்பாக விஷேட கவனம் செலுத்தப்பட வேண்டும்.

| | முறைமை | குறைபாடு |
|---|---|---|
| (அ) | கணக்கீடு | (i) தொங்கல் கணக்கு மீதி சரியான முறைப்படி இனங்கண்டு சரிசெய்திருக்காமை.<br>(ii) ஒரே பெறுமதி இரண்டு முறைகள் கணக்கீடு செய்யப்பட்டிருந்தது. |
| (ஆ) | கடன்கொடுத்தோர் | (i) அட்டவணை தயாரித்திருக்கவில்லை.<br>(ii) காலப்பகுப்பாய்வு தயாரிக்காமை |
| (இ) | நிலையான சொத்துக்கள் | (i) சொத்துக்கள் பதிவேடு பேணப்படாமை |
| (ஈ) | ஊழியர் முகாமைத்துவம் | (i) பதவியணி அங்கீகரித்திருக்காமை<br>(ii) மிகை ஊழியர்கள் வைத்திருத்தல்<br>(iii) பற்றாக்குறையான ஊழியர் வெற்றிடங்கள் நிரப்பாமை<br>(iv) ஊழியர்களுக்கு முறைசார் விதமாக கடமைகள் சாட்டப்பட்டிருக்காமை |